# ஸ்ரீமார்க்கண்டேயருடைய பெருமைகள்

**(ந்யாயவேதாந்த வித்வான் காரப்பங்காடு ஸ்ரீ.உ.வே.வேங்கடாசார்ய ஸ்வாமியின் உபந்யாஸங்களிலிருந்து தொகுக்கப்பெற்றது)**

இதிஹாஸ புராணங்களிலே ஸ்ரீமார்க்கண்டேயர் மஹாதபஸ்வீ, ப்ரஹ்மரிஷி, பரமபாகவதோத்தமர், மஹாத்மா என்றெல்லாம் கொண்டாடப் படுகிறார். இவர் மூப்பு மரணங்களை வென்றவர். பகவானுடைய பெருமைகளை லோகத்தாருக்கு எடுத்துரைப்பதில் ஆற்றலும் ஊற்றமும் உடையவரானபடியாலே ஔதார்யம் மிக்கவராகக் கொண்டாடப்படுகிறார். உத்தமரான மார்க்கண்டேயருடைய சரித்ரம் நம்முடைய பாபங்களைப் போக்கி நம்மை நல்வழிப்படுத்தும்; நமக்கு எல்லா மங்களங்களையும் அளிக்கும்.

மஹர்ஷிகளிலே வஸிஷ்டர், ஶக்தி, பராஶரர், ஶுகர் மற்றும் இவர்களுடைய உபதேஶ பரம்பரையிலே வந்துள்ள வைஶம்பாயநர், ஶௌநகர், ஸூதபௌராணிகர் என்று அமைந்துள்ள பரம்பரை பரமவிலக்ஷணமான ஸ்ரீவைஷ்ணவ ரிஷி பரம்பரையாகும். இவர்களுக்குப் பெருமைகள் பலவுண்டு. அவற்றுள் மிகமுக்யமானது பகவானுடைய வைபவங்களை இவர்கள் லோகத்தாருக்கு நன்கு எடுத்துரைத்திருப்பதாகும். இவர்களுடன் நாம் ஸ்ரீமார்க்கண்டேயரையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். உண்மையில் மஹர்ஷிகளில் இவருக்குண்டான பெருமைகள் மற்ற யாருக்குமே இல்லை என்று சொல்லலாம். மஹா வைபவ ஶாலியான இவருடைய பெருமைகள் மஹாபாரதம், ஸ்ரீமத் பாகவதம், பாத்மபுராணம், முதலான க்ரந்தங்களிலே பரக்கச் சொல்லப்பட்டுள்ளன.

பரமபதத்தில் முக்தர்களுக்குண்டான சில லக்ஷணங்கள், அவர்களுக்கு ஏற்படும் சில அநுபவங்கள் இவற்றின் ஏகதேஶம் ஸம்ஸார மண்டலத்தில் இருக்கும் சில விஶேஷ வ்யக்திகள் விஷயத்திலும் கேவலம் பகவதநுக்ரஹமடியாக ஏற்படுகிறது, ஶ்வேதத்வீபவாஸிகள் முக்தர்களுடைய லக்ஷணங்களையும் அநுபவங்களையும் அதிகமாகப் பெற்றிருப்பவர்கள். திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷம் குடிப்பெண்களுக்கும் கிடைத்த க்ருஷ்ணாநுபவம் பரமபதத்தில் மஹாலக்ஷ்மிக்குங்கூட கிடையாது என்கிறார் ஶுகர் ஸ்ரீமத்பாகவதத்திலே. வடபெருங்கோயிலுடையான் விஷயத்தில் பெரியாழ்வாருக்கும், திருவேங்கடமுடையான் விஷயத்தில் ஸ்ரீஅநந்தாழ்வானுக்குக் கிடைத்த புஷ்பகைங்கர்யம், ஸ்ரீகாஞ்சீ பேரருளாளன் விஷயத்தில் திருக்கச்சி நம்பிகளுக்குக் கிடைத்த திருவாலவட்ட கைங்கர்யம், அவனிடத்திலேயே நடாதூர் அம்மாளுக்கும் திருநாரணன் விஷயத்திலே ஜநந்யாசார்யருக்கும் கிடைத்த பாலமுது கைங்கர்யம் போன்ற இவற்றை பரமபதத்திலே நித்யமுக்தர்களுக்குக் கிடைக்கும் பேறுகளுக்கு ஸமமாகச்

சொல்லலாம். இத்தகைய விசேஷ வ்யக்திகளில் நாம் ஸ்ரீமார்க்கண்டேயரை யும் ஒருவராகக் கொள்ளவேண்டும். இவர் நித்யமுக்தர்களைப் போன்று எப்போதும் 25 வயது யுவாவாகவே இருப்பவர்.

காலம் என்று ஒரு தத்த்வம். இது ஸம்ஸாரமண்டலத்தில் உள்ள ஜீவாத்மாக்கள் அனைவரையும் தன் வசத்தில் வைத்திருக்கும். 'ஸதாபச்யந்தி ஸூரய:' என்று ச்ருதி இருப்பதால் பரமபதத்திலும் காலம் என்கிற தத்த்வம் உண்டு என்று தெரிகிறது. ஆனால் பரமபதத்தில் காலம் விலை செல்லாது. அங்கே கால பரிணாமம் என்பதே கிடையாது. நித்யவிபூதியில் உள்ளவர்கள் காலத்திற்கு வசப்பட்ட வர்கள் அல்லர். ஆனால் லீலாவிபூதியில் ஸம்ஸார மண்டலத்தில் இருப்பவர்களை காலமானது பாதித்துக்கொண்டேயிருக்கும். பிறப்பு, இறப்பு, பிணி, மூப்பு எல்லாம் காலத்தை அநுஸரித்து கர்மாதீநமாய் ஸம்ஸாரிகளுக்கு ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. ஸம்ஸாரிகளில் எப்பேர்ப் பட்டவர்களுக்கும் காலமானது சில ஸமயங்களில் அநுகூலமாய் இருக்காது. யாவராயினும் காலத்தை அநுஸரித்துத் தான் இந்த ஸம்ஸார மண்டலத்தில் வாழவேண்டும். காலத்தினுடைய பெருமையைப் பற்றி பலி இந்த்ரனுக்கு உபதேசிக்கும் ஆச்சர்யமான ப்ரகரணம் மஹாபாரதத்தில் சாந்தி பர்வத்தில் உள்ளது நம்மால் அறியத்தக்கது.

தேவாஸுர யுத்தத்தில் ஒருமுறை தேவர்களுடைய பலம் ஓங்கியிருந்தது. இந்த்ரன் எல்லா அஸுரர்களையும் வென்றான். ஆனால் அவனுக்கு விரோச நன் புத்ரனான மஹாபலி இருக்குமிடம் தெரியவில்லை. ப்ரஹ்மாவிடம் சென்று பலி எங்கு இருக்கக்கூடும் என்பதை ஒருவாறு அறிந்துகொண்டான். ஆனால் ப்ரஹ்மா பலியைக் கொல்லக்கூடாது என்று இந்த்ரனுக்கு நியமித்துவிட்டார். ப்ரஹ்மா சொன்னபடி பலி கழுதை உருவில் ஒரு பாழடைந்த வீட்டில் இருக்கிறான். அவனிடம் சென்ற இந்த்ரன் அவனைப் பலவாறு ஏளனம் செய்து பேசுகிறான். பலியுடைய பெருமைகளை அதாவது ஒரு காலத்தில் அவன் எவ்வளவு கீர்த்தி, ஐச்வர்யம், பராக்ரமம் இவற்றுடன் வாழ்ந்தான் என்பதை எடுத்துச்சொல்லி, அந்தப் பெருமைகள் எல்லாம் எங்கே போய்விட்டன என்று கேட்கிறான்.

''அஸுரனே! நீ இப்போது கழுதை யாய் உமிகளைத் தின்று கொண்டு காலத்தைப் போக்குகிறாய்! இத்தால் உனக்கு சோகம் உண்டாகவில்லையா? ஒரு காலத்தில் நீ எப்படிப்பட்ட ஐச்வர்யத்தையும், பராக்ரமத்தையும் கொண்டு இருந்தாய் என்பது நினைவில் இருக்கிறதா? அவையெல்லாம் எங்கே போய்விட்டன? பகைவர்களுக்கு வசப்படும்படியான இந்த நிலை உனக்கு எப்படி வந்தது? நீ அஸுரர்களுக்கு அதிபதியாய் இருந்த காலத்தில் எல்லா அஸுரர்களும் உனக்கு அடிபணிந்தவர் களாய் இருந்தனர். ஆயிரமாயிரம் தேவஸ்த்ரீகள் நடனமாடி உன்னை

ஆநந்திப்பித்துக் கொண்டிருந்தனர். ஆயிரமாயிரம் கந்தர்வர்கள் இசைபாடி உன்னை மகிழ்வித்துக் கொண்டிருந்தனர். ரத்நங்கள் பதிக்கப்பெற்றதும் பொன் னிறமானதுமான உன்னுடைய குடை இப்போது எங்கே போயிற்று? ஒரு காலத்தில் பல யாகங்கள் செய்து இந்த லோகம் முழுவதையும் யாகபூமியாய் ஆக்கி வைத்திருந்தாயே! நீ செய்திருக்கும் யாகங்களுக்கு ஒரு அளவே இல்லையே! ப்ரஹ்மாவினால் கொடுக்கப்பட்ட மாலையும் இப்போது உன்னிடத்தில் காணப்படவில்லையே! உன்னுடைய ஐஶ்வர்யம், கீர்த்தி, பராக்ரமம் எல்லாம் எங்கே போய்விட்டன? இவற்றை முழுவதுமாக இழந்து இருக்கும் உனக்கு துக்கம் ஏற்படவில்லையா?'' என்றும், இதைப் போன்று இன்னும் பலவார்த்தை களையும் சொல்லி பலியை ஏளனம் செய்கிறான் இந்த்ரன். இதற்குப் பதிலாக மஹாபலி சொல்லும் வார்த்தைகள் ஆஶ்சர்யமானவை.

''தேவர்களுக்குத் தலைவனான இந்த்ரனே! விவேகம் இல்லாதவனாய், பிறர்க்கு துக்கம் கொடுக்கும்படியான வார்த்தைகளைப் பேசுகிறாய்! இது உனக்குப் பொருத்தமன்று; நான் இப்போது இழந்து விட்டதாக நீ சொல்லும் ஐஶ்வர்யத்தையும், கீர்த்தியையும் மீண்டும் ஒரு காலத்தில் என்னிடத்தில் பார்க்கப்போகிறாய். இவை அனைத்தும் ஒரு காலத்தில் வரும்; மற்றொரு காலத்தில் போகும். ஜ்ஞாநத்தையும் பொறுமையை யும் உடைய ஸாதுக்கள் இவற்றால் துக்கப்படமாட்டார்கள். நீ இப்போது மதியை இழந்து உன்னைப்பற்றி மிகவும் உயர்வாக நினைத்துக் கொண்டிருக்கிறாய்! இன்று நான் இருக்கும் நிலை நாளை உன்னை யும் வந்து சேரும் என்பதை அறிவாய்''.

''காலம் என்கிற மஹத்தான தத்த்வம் பரப்ரஹ்மத்தினுடைய ஶக்தி விஶேஷம். இந்த லோகத்தில் காலத்தின் மாறுதலால் ஐஶ்வர்யம், பராக்ரமம் போன்ற எதுவும் ஒருவனிடத்தில் நிலைத்திராது. இதைக் கண்டு விவேகியாய் இருப்பவன் மனம் தளரமாட்டான். மிகவும் ஶக்தி வாய்ந்த காலத்தினால் பாதிக்கப்படாதவர் இந்த லோகத்தில் யாருமில்லை. இந்த லோகத்தில் ஒருவனுக்கு தநம் இருக்கலாம்; மற்றொருவனுக்கு அது இல்லாமற் போகலாம்; ஒருவனுக்கு அழகு இருக்கலாம்; மற்றொருவனுக்கு அது இல்லாமற்போகலாம்; ஒருவனுக்கு ஸுகபோகங்களுடன் வாழ்க்கை அமையலாம்; மற்றொருவனுக்கு அவை இல்லாமற்போகலாம்; ஆனால் யாருக்கும் இந்த நிலைகள் எப்போதும் இப்படியே இருக்கமாட்டா; காலத்தை அநுஸரித்து அவை மாறிக்கொண்டேயிருக்கும். ஸத்த்வகுணம் தலையெடுத்தவர்களாய், நல்ல ஜ்ஞாநத்தை உடையவர்களாய் இருப்பவர்கள் எல்லாவித பாபகர்மங்க ளில் இருந்தும் நிவ்ருத்தியை அடைவர். எப்பேர்ப்பட்டவர்களையும காலம் தன் வஶத்தில் வைத்துள்ளது. நீ நினைக்கிறபடி

ப்ரபுத்தன்மையும் பராக்ரமும் என் வஶத்திலும் இல்லே. உன் வஶத்திலும் இல்லே. நாம் அனைவருமே காலத்துக்கு வஶப்பட்டவர்கள். இதை அறிந்த எனக்கு ஶோகம் கிடையாது. இப்போது எனக்கு காலம் அநுகூலமாய் இல்லே. என்னுடைய இந்த நிலே எப்போதும் இப்படியே இருக்காது. உனக்கு காலம் இப்போது அநுகூலமாய் இருக்கிறது. ஆனல் உன்னுடைய இந்த நிலேயும் எப்போதும் இப்படியே இருக்காது. நீ செல்வச் செருக்கால் என்னே ஏளனம் செய்கிருய். இந்த நிலேயிலும் என்னல் வஜ்ராயுதத்தை ஏந்திய உன்னே ஒரு அடி கொடுத்தே வீழ்த்திவிட முடியும். எனக்குக் காலம் அநுகூலமாய் இல்லாதபடியால் என்னுடைய பராக்ரமத்தைக்காட்ட இது ஸமயமன்று என்று நிவ்ருத்தியை அடைந்திருக்கிறேன். நான் ப்ரஹ்மா வுடைய லோகத்தையும் ஜயித்தவன். அஸுரர்களுக்குத் தலேவனும், மிகுந்த பலஶாலியும், பராக்ரமஶாலியுமான என்னேயே காலம் அழுத்திவிட்டது. நீ எம்மாத்திரம்?'' என்றும்,

மேலும் சில வார்த்தைகளாலும் காலப்ரஹ்மத்தின் பெருமையை இந்த்ரனுக்கு எடுத்துச் சொல்கிருன் பலி. ஸம்ஸார மண்டலத்தில் காலத்தை வென்றவர் ஒருவர்தான் உண்டு. அவர்தான் ஸ்ரீமார்க்கண்டேயர். இவர் ப்ரஹ்மாவை ஒத்த தீர்க்கமான ஆயுஸ்ஸைப் பெற்றிருப்பவர். தாம் விரும்பும் போது மட்டுமே மரணத்தை அடையும்படியான ஶக்தியை யுடையவர்.

'மார்க்கண்டேயன் கண்ட வகையே வருங்கண்டீர்' (நான். திருவ. 15), 'புக்கடிமையினல் தன்னேக் கண்ட மார்க்கண்டேயனவனே' (திருவாய் 4–10–8), 'மார்க்கண்டேயனுக்கு வாழுநாள்' (திருவாய் 7–5–7) 'மன்னுநான்மறை மாமுனி' (பெரியதிரு.5–8–6) என்று நமது ஆழ்வார்களும் இவரைத் தம் பாசுரங்க ளில் கொண்டாடியிருக்கின்றனர். 'மார்க்கண்டேயனும் கரியே' (திருவாய் 5–2–9) என்று நம்மாழ்வார் இவரை பகவத் பரத்வத்துக்கு ஸாக்ஷியாகக் கொண்டாடுகிருர். ஶாஸ்த்ர க்ரந்தங்களே ஆராய்ந்து பார்த்து பரதத்த்வத்தை நிர்ணயம் செய்ய அவஶ்யம் கிடையாது; ஸ்ரீமார்க்கண்டேயருடைய சரித்ரம், உபதேஶம் இவை போதும் – பரதத்த்வம் நாராயணன் என்று அறுயிடுவதற்கு என்பது ஆழ்வாருடைய திருவுள்ளம்.

ஸ்ரீமார்க்கண்டேயருடைய சரித்ரமாவது என்ன? ம்ருகண்டு மஹர்ஷிக்குத் திருக்குமாரராகப் பிறந்தவர் ஸ்ரீமார்க்கண்டேயர். இவர் சிறு பிராயத்திலிருக்கும்போது விளேயாடிக் கொண்டிருந்தார். அதை இவருடைய பெற்ருேர்கள் ரஸித்துக்கொண்டு இருந்த போது ஒரு அஶரீரி குரல் இவருடைய ஆயுஸ் முடியப்போகிறது என்று உரைத்தது. இத்தால் மிகவும் மனவருத்த முற்றுத் துடிதுடித்த தம் பெற்ருேர்கள் வருத்தம் தீருவதற்காக இவர் ஶிவனேக் குறித்துத் தவம் செய்தார். தம்

பெற்றோர்கள் மனமகிழ்ச்சிக்காகத் தமக்கு தீர்க்கமான ஆயுஸ்ஸையும், தமக்காக மோக்ஷத்தையும் இவர் ஶிவபெருமானி டம் ப்ரார்த்திக்க, அவரும் இவருக்கு பகவத்பரத்வத்தை எடுத்துச் சொல்லி, பகவான் நாராயணனே மோக்ஷப்ரதனென படியால் அவனையே இவர் ஆஶ்ரயிக்கும்படிச்செய்தார். இப்படி ஶிவபெருமானுடைய அநுக்ரஹமடியாக பகவத்பரத்வத்தை உணர்ந்துகொண்ட ஸ்ரீமார்க்கண்டேயர், பகவானையே எல்லாமாகப்பற்றி அவன் இன்னருளால் பரமபாகவதோத்தமராம்படியான நிலையை அடைந்தார்.

பகவான் இவருக்குத் தன் ஸ்வரூபத்தைக் காட்டி அநுக்ரஹித்த சரித்ரம் அத்யாஶ்சர்யமானது. ஒருமுறை ப்ரஹ்மாவுடைய பகற்காலம் முடிந்து இரவுக்காலம் தொடங்குகிற ஸமயத்தில் நைமித்திக ப்ரளயம் ஏற்படுகிறது. ப்ரளய ஜலத்தில் ஆழ்ந்துகொண்டு இருக்கிற மூன்று லோகங்களையும் பகவான் பாலமுகுந்தனாய் – வடபத்ரஶாயியாய் ஆலிலைக்கண்ணனாய்த் தன் திருவயிற்றில் வைத்து ரக்ஷித்துக் கொண்டிருக்கிறான். அவனுடைய அநுக்ரஹமடியாக ஸ்ரீமார்க்கண்டேயர் அவனுடைய திருவயிற்றில் புகுந்து, அவனால் ரக்ஷிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மூன்று லோகங்களையும் கண்டு களிக்கிறார். பிறகு அவனுடைய திருவயிற்றிலிருந்து வெளி வந்து அவனது திருவடிவாரத்திலேயே வாஸம் செய்து கொண்டு ப்ரளய காலத்தைக் கழிக்கிறார். யாருமே காணமுடியாத தன்னுடைய திவ்யமான ரூபத்தை இப்படி ஸ்ரீமார்க்கண்டேயருக்குக் காட்டியருளிய பகவான் அவருக்குத் தன் ப்ரபாவங்களை எடுத்துச் சொல்கிறான். தன் திருவவதாரங்களுக்குண்டான ப்ரயோஜநங்களையும் அருளிச்செய்கிறான். இது பகவான் ஸ்ரீமார்க்கண்டேயருக்குச் செய்தருளிய கீதோபதேஶமாகும். இப்படியாக இவருடைய வைபவம் இருக்கும்படியை ஒருவாறு அறிந்தோம்.

ஃ×ஃ×ஃ×ஃ×ஃ×ஃ×ஃ×ஃ×ஃ×ஃ×ஃ×ஃ